# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

அசல் வழக்கு எண்.221/2024

நாள்: 02.06.2026

வா.சா. 1 – ஜானகி

2026–ம் ஆண்டு ஜுன் 02–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பிறந்தது தா.பழூர் கிராமம். திருமணம் செய்துக்கொண்டதும் அதே ஊர் தான் என்றால் சரிதான். எனது மாமனார் பெயர் ரெங்கசாமி என்றால் சரிதான். அவருக்கு இரண்டு தாரம் என்றால் சரிதான். முதல் தாரம் மாசிலாமணி ஆவார். அவர் என் அப்பாவின் மூத்த சகோதரி. இரண்டாவது தாரத்தின் பெயர் லெட்சுமி. இரண்டு தாரத்திலும் சேர்த்து பாண்டியன், இளவரசன், சக்கரவர்த்தி, புகழேந்தி மற்றும் கண்ணகி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். இரண்டாவது தாரத்து லெட்சுமி உயிரோடு இருக்கிறார் என்றால் சரிதான். தங்கவேல் என்பவர் என் பெரியம்மா மகன் என்றால் சரிதான். எனது மாமனார் ரெங்கசாமிக்கு தங்கவேல், இரத்தினசாமி ஆகியோர் சகோதரர்கள் என்றால் சரிதான். எனது கணவர் ரெங்கசாமியின் மகன் ஆவார். தாவா சொத்துகள் எனது மாமனாரின் பூர்வீக சொத்துகள் என்றால் சரியல்ல. தங்கவேலின் தனிப்பட்ட சொத்து. தங்கவேலுக்கு வாரிசுகள் உள்ளனர். தங்கவேலுக்கு சொந்தமான சொத்தை நாங்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. தங்கவேலிடம் இருந்து என் கணவர் கிரயம் வாங்கி எனது பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார். தங்கவேலிடம் இருந்து

என் கணவர் கிரயம் வாங்கியதாக வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மாமனார் ரெங்கசாமிக்கு எனது கணவரையும் சேர்த்து 6 வாரிசுகள் உள்ள நிலையில் எனது கணவருக்கு மட்டும் தாவா சொத்துகள் சொந்தம் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. 23.09.2021 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரத்திலும் வழக்குரையிலும் காலிமனை என்று கூறிவிட்டு தற்போது தாவா சொத்தில் குடியிருப்பதாக ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் குடியிருக்கவில்லை, தாவா சொத்து காலிமனையாக உள்ளது. தாவா சொத்தில் என் மாமனாருக்கு 2 செண்ட் தான் பாகம் என்றால் சரியல்ல. எனது மாமனாருக்கு 6 வாரிசுகள் உள்ளதால் என் கணவருக்கு தாவா சொத்து முழுவதும் பாத்தியம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளது தவறு என்றாலும் தாவா சொத்தை என் கணவர் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைக்க உரிமையில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் 4 வது பாராவில் 1ம் பிரதிவாதி ஜெயங்கொண்டம் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் எண்.175/2014-ல் உள்ள சொத்து வழக்கு சொத்துடன் தொடர்புடையது அல்ல என்று சொல்லியுள்ளது தவறு என்றாலும் வழக்கு சொத்துக்கு தான் மேற்படி அசல் வழக்கை 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண்ணில் இரத்தினசாமி பாகம் 2 செண்ட்டை 1ம் பிரதிவாதி கிரயம் வாங்கினார் என்றாலும் அதில் பிரச்சனை ஏற்பட்டதால் 1ம் பிரதிவாதி அசல் வழக்கு எண்.175/2014-ல் IA.No.536/2014-ல் 1ம் பிரதிவாதி இரத்தினசாமி வகையறாவிற்கு எதிராக தற்காலிக உறுத்துக்கட்டளை பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு 42 வயது. என் கணவருக்கு 50 வயது. எனது கணவருக்கு 50 வயது ஆகும்போது பிராதில் 60 ஆண்டு காலமாக அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

இரத்தினசாமியின் வாரிசு என்ற அடிப்படையில் என் கணவருக்கு அரை செண்ட்டுக்கும் குறைவாக தான் பாகம் உள்ளது என்றாலும் எனக்கு அதிகப்படியான சொத்துகளை செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளது தவறு என்றாலும் சரியல்ல. எனது கணவர் அவருக்கு உரிமையில்லாத சொத்தை எனக்கு செட்டில்மெண்ட் எழுதிவைக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளபடிக்குரியது என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.